**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.129/2019**

| | | |
|---|---|---|
| **NAME** | : | பூங்கொடி |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 22.11.2022.**

குறுக்கு விசாரணை

இந்த வழக்கு போடுவதற்கு முன்பு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம். என் தம்பி மூர்த்தி இறந்துபோய்விட்டார். என்னுடைய மகளை மூர்த்திக்கு திருமணம் செய்து வைத்தேன். என் மகளும் என் பேத்தியும் எங்களிடம்தான் இருக்கிறார்கள். 2015ல் பத்திரம் பதிவு செய்யும்போது என் தம்பி காலமாகிவிட்டார். என் தம்பி காலமானதால் அந்த சொத்து என் மகளுக்கும் பேத்திக்கும் வந்தது என்றால் சரி. பத்திரப்பதிவிற்கு நான் போனேன், என் மகள் வரவில்லை. சொத்து என் மகளிடம்தான் இருக்கிறது. அவள்தான் அனுபவிக்கிறார். எனக்கு தெரியாமல் பத்திரம் பதிவு செய்துவிட்டார்கள். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பொண்ணுக்கும் ஒரு பங்கு வரும் என்று தெரிந்துதான் நான் பத்திரம் பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் போட்டுள்ள வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.